DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No.12 /2025

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | : கோவிந்தராஜ் | Father's/Husband's Name : | ராதாகிருஷ்ணன் |
| Village | : கடமலைக்குண்டு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வழகக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியாது. அதன் நான்குமால் தெரியும். தெற்கு – ரோடு, மேற்கு – அய்யாச்சாமி நிலம், வடக்கு – கரட்டுக் குட்டம், கிழக்கு – ரோடு. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் பிரதிவாதி ராமருக்கு பாத்தியப்பட்ட நிலம் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்து மானாவாரி நிலம் என்றால் தோட்டம் இருக்கிறது. அதில் கிணறு, பம்பு செட் இருக்கிறது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மேற்கு பக்கம் உள்ள நிலத்தில் தனியாக கிணறு, பம்பு செட் இருக்கிறதா என்றால் இல்லை, பொதுக் கிணறு பம்பு செட் உள்ளது. மேற்படி கிணறு, பம்பு செட் பிரதிவாதி ராமர் நிலத்தில் தான் இருக்கிறது என்றால் வழக்கு சொத்தில் இல்லை என்றால் ஆமாம். மேற்கு பக்கம் உள்ள பிரதிவாதி ராமர் நிலத்தில் தான் இளவமரம், தக்காளி, கொட்டை முந்திரி மரங்கள் இருக்கிறது என்றால் சரிதான்.

2) தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விபரம் எனக் குதெரியாது. பிரதிவாதி ராமர் பெயரில் தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதியின் தகப்பனாரும் அவருக்கு பின்பு வாதியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்ததிலிருந்து ராமர் தான் அனுவபத்தில் இருக்கிறார், வாதி இல்லை. பிரதிவாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வயது 52 தான் ஆகிறது என்பதால் 40 வருடங்களாக பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 24.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.07.24 12:22:50 +0530

District Munsif,
Aundipatti.